# கிழக்கு மாகாண "வித்தகர் விருது" வழங்கல்

கிழக்கு மாகாண தமிழ் இலக்கியப் விழாவின் ஓர் அம்சமாக, கலை இலக்கியத் துறையில் ஈடுபட்டு, தத்தம் துறைகளில் முத்திரை பதித்த மூத்த கலைஞர்கள் "வித்தகர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகின்றார்கள். இவ்விருதுகள் கௌரவிப்புக்கள் மூலம் கலைஞர்களை கௌரவிப்பதனூடாக பல இளந்தலைமுறைக் கலைஞர்களை கலை இலக்கிய துறையில் ஈடுபடத் தூண்டுவதும் இதன் நோக்கமாகும். இவ் விருதுக்காக இலக்கியகர்த்தாக்கள், கலைஞர்கள், துறைசார் வல்லுனர்கள் விண்ணப்பிக்கலாம்.

## தேர்வுக்கான பொது நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர் 01.01.2017 அன்று 60 வயதினை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. கிழக்கு மாகாணத்தினை நிரந்தர வசிப்பிடமாக கொண்டவராக அல்லது 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கிழக்கு மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
3. 25 வருடங்களுக்கு மேல் தன் துறை சார்ந்த அனுபவம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4. கடந்த காலங்களில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளுனர் விருது, முதலமைச்சர் விருதுகள் பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.
5. போட்டி விதிமுறைகளிற்கு உட்படாத விண்ணப்பங்கள், நடுவர் தேர்விற்காக சமர்ப்பிக்கப்படமாட்டாது. அதனை நிராகரிக்கும் உரிமை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு உண்டு.
6. விருதுக்காக சமர்ப்பிக்கப்படும் படைப்புக்கள் மற்றும் ஆவணங்கள் தபால் மூலமோ அல்லது வேற இயற்கை அனர்த்தங்களின் போதோ சேதமேற்படின் அவை தொடர்பாக பண்பாட்டலுவல்கள் திணைக்கம் பொறுப்புக் கூறமாட்டாது.
7. சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் துறைசார் நடுவர் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் வித்தகர் கிழக்கு மாகாண இலக்கிய விழாவின் போது கௌரவிக்கப்படுவார்.
8. இப் தேர்வுக்காகக விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதே சகல போட்டி நிபந்தனைகளுக்கும் உடன்படுவதாக கருதப்படும்.
9. நடுவர் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்